**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-09032025-8601

Volume: 9

Issue: 3

Month: January

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 26.10.2024

Accepted: 09.12.2024

Published: 01.01.2025

Citation:
Kannadasan, V. "Traces of Tamil Studies – History and Values." *Shanlax International Journal of Tamil Research*, vol. 9, no. 3, 2025, pp. 51–60.

DOI:
https://doi.org/10.34293/tamil.v9i3.8601

*Corresponding Author:
vlkannadasan@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Traces of Tamil Studies – History and Values

**V. Kannadasan**
*Assistant Professor*
*SRM Institute of Science and Technology*
*Faculty of Science and Humanities, Chennai*

**Abstract**

*Every language's literary and grammatical texts serve as historical models, recording human thought processes and shaping time and its contradictions. In this context, Sangam literature can be identified as valuable documentation that provides insights into the socio-cultural and intellectual traditions of ancient Tamil society. A deep analysis of the structure and thematic aspects of the poems in the Sangam corpus reveals oral traditions that were prevalent among the early Tamil communities. These compositions, which existed as oral poems before being transcribed onto manuscripts, highlight the transformation from oral to written traditions.The materials, cultural values, and historical sources that evolved from oral traditions to written records have been analyzed over time based on geographical and political contexts. With the arrival of Europeans and the spread of the printing press, Tamil studies underwent a shift influenced by scientific and Marxist perspectives. Researchers from different linguistic and cultural backgrounds integrated these perspectives, challenging previous interpretations and necessitating a re-reading of Tamil history and literature.This article aims to compile and compare the evolving research trends in Tamil studies over time, analyzing the various research trajectories that have shaped the field.*

***Keywords:*** *Natural Dynamics, Tolkappiyam's Structural Theories, Intellectual Traditions, Tamil Studies Research Perspectives, Archaeological Findings, Historical Narratives, Commentary Traditions, Printing and Publishing*

**References**

1. Thaninayagam Xavier Adigal, N. Manoharan (Trans.), Education in Ancient Tamil Society, Parisal Publications, 2009.
2. K. Sivathambi, Tolkappiyam and Poetry, Kumaran Book House, Colombo, Chennai, 2007.
3. K. Sivathambi, Sangam Literature: Poetry and Thought, International Institute of Tamil Studies, Chennai, 2009.
4. R. Kamarasu, Thaninayagam Adigal's Contribution to Tamil Studies, Sahitya Akademi Publications, 2017.

# தமிழியல் தடங்கள் – வரலாறும் விழுமியங்களும்

*முனைவர் வே. கண்ணதாசன்*
உதவிப் பேராசிரியர்
எஸ்.ஆர்.எம் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்
அறிவியல் மற்றும் மானுடவியல் புலம், சென்னை

**ஆய்வுச்சுருக்கம்**
*பழந்தமிழினத்தின் வாழ்வியங்கியலையும் புலமைமரபுப் போக்குகளையும் செய்யுளாக்கச் செயல்பாடுகளையும் அளந்தறிவதற்குரிய ஆவணங்களாகச் சங்க இலக்கியங்களை அடையாளம் காணவியலும். சங்கத் தொகுப்பினுள் இடம்பெற்றுள்ள பாடல்களை அவற்றின் வடிவ மற்றும் கருத்து நிலை அடிப்படையில் ஆய்வுக்குட்படுத்தும் பொழுது தொல்தமிழ்க் குடிகளின் வாய்மொழி மரபுசார்ந்த எச்சங்களை இனம் காணமுடிகிறது. ஏடுகளில் எழுதப் பெறுவதற்கு முன்னரே பன்னெடுங்காலம் வாய்மொழிப் பாடல்களாக வழக்கிருந்தனவாகவோ அவற்றிலிருந்து வளர்ந்த ஒன்றாகவோ அடையாளப்படுத்த அவை இடம் அளிப்பதை மறுப்பதற்கில்லை. வாய்மொழி மரபில் இருந்து வளர்ந்து எழுத்து மரபாய் விரிந்த நிலையில் கிடைக்கும் புழங்குபொருள் தரவுகளும் பண்பாட்டு விழுமியங்களும் வரலாற்று மூலங்களும் காலந்தோறும் நிலவியல் மற்றும் அரசியல் சூழல்களுக்குட்பட்டவாறு ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பாங்கு மிகுமுக்கியத்துவம் வாய்ந்தது. குறிப்பாக அச்சுப்பொறி பரவலாக்கத்தால் அறிவியல் மற்றும் மார்க்சியப் பார்வையோடு வேற்று மொழி இனம் மற்றும் பண்பாடு சார்ந்த ஆய்வாளர்களால் அவை உள்வாங்கப்பட்டு வெளிப்பட்ட கருத்தியல்கள் முந்தைய பார்வையை உடைத்து மாற்றுப்பாதையில் பயணிக்க வேண்டிய கட்டாயத்தையும் மறுவாசிப்புக்குட்படுத்த வேண்டிய தேவையையையும் காட்டுகின்றன. அவ்வகையில் காலந்தோறும் தமிழியல் ஆய்வுத்தடங்களாக மிளிர்ந்தவற்றைத் தொகுத்து ஒப்பிட்டு ஆயும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது*

***திறவுச்சொற்கள்:*** *இயற்கைசார் இயங்கியல், தொல்காப்பியத் திணைக்கோட்பாட்டியல், புலமைமரபுப் போக்குகள், தமிழியல் ஆய்வுப் புள்ளிகள், அகழாய்வுகள், வரலாறெழுதியல், உரைமரபு, அச்சும் பதிப்பும்.*

## முன்னுரை

இலக்கியம் என்பது மானுட வாழ்வியல் நடைமுறைகளின் முகிழ்ப்பாக வார்ப்பாக ஆக்கம் கொள்ளும் போக்கினை உட்கொண்டே தொல்காப்பியர், இலக்கியம் கண்டு இலக்கணம் இயம்பும் நடைமுறையை 'பாடலுள் பயின்றவை நாடுங்காலை' எனத் தெளிவுபடுத்திக் காட்டுகிறார். இலக்கிய இலக்கணப் பனுவல்கள் வரலாற்றின் வகை மாதிரிகளாக, மானுட சிந்தனைப் போக்கின் பதிவுகளாக, காலத்தையும் காலத்தின் முரண்பாடுகளையும் கட்டமைத்துக் காட்டுகின்றன எனக் கொள்வதில் பிழையேதும் இல்லை.. அவ்வகையில் பழந்தமிழினத்தின் வாழ்வியங்கியலையும் புலமைமரபுப் போக்குகளையும் செய்யுளாக்கச் செயல்பாடுகளையும் அளந்தறிவதற்குரிய ஆவணமாகத் தொல்காப்பியத்திணைக் கோட்பாட்டியலைக் கருதவியலும். தொல்காப்பியர் இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல் செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல் (கிளவியாக்கம்.19) என இயற்கைச் சார்புப் பின்னணியின் ஊடே புதிய பொருட்களின் உருவாக்கம் நிகழுமாற்றை எடுத்துக்காட்டுகிறார். இயற்கைச் சார்புப் பின்னணியில் மனிதன், வாழ்வியல் தேவை கருதிப் புதியனவாகப் படைத்து ஆக்கிக்கொள்ளும் அனைத்துமே அவ்வக்கால வரலாற்று விழுமியங்களாக மிளிர்வதைக் காண்கிறோம். இந்தப் பின்னணியோடு இலக்கியம் என்பது காலத்தின் உற்பத்தி; அது காலத்தையும்

உற்பவிக்கின்றது என்னும் கருத்தியலை உற்றுநோக்கினால் எந்த ஒரு மொழியிலும் மக்கள் வாழ்முறையின் முகிழ்ப்பாக / வார்ப்பாகவே கலை இலக்கியப் பண்பாட்டு மூலங்கள் கருக்கொள்வதைக் கட்டமைக்க இயலும். உலகியலுக்கும் அதன் ஊடாய் ஊற்றெடுக்கும் இத்தகைய பண்பாட்டு நடவடிக்கைகளுக்கும் இடையேயான உறவுப்பின்னல் உலகமொழிகள் அனைத்திற்குமே பொதுவானது எனினும் குறிப்பிட்ட மொழிசார்ந்த வரலாற்றைக் கட்டுமானம் செய்வதில் அவை முக்கியத்துவம் பெறுவதை மறுப்பதற்கில்லை. காலச் சக்கரத்தின் ஞாலசூழற்சியில் மானுட மன வெளிப்பாட்டின் பல்பரிமாணங்களை உள்ளீடாகக் கொண்டே தோற்றம் கொள்ளும் தன்மையது ஆகையால் மொழியின்வழி ஒரு இனத்தை தீர்க்கமாக வரையறை செய்வதில் இவை முக்கியக் காரணிகளாகின்றன.

சமூக இயங்கியலில் காலந்தோறும் ஏற்படும் மாற்றங்கள், மறுதலிப்புகள் ஆகியவற்றை உட்கொண்டு படைப்பாக்கம் நிகழும்பொழுது வடிவம், உள்ளடக்கம், கருத்தியல் நிலையில் புதியபோக்குகளுக்கு இடம் அளிப்பது இயல்பானது, அதனால்தான் நன்னூலைப் படைத்த பவணந்திமுனிவர் பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினான (நன்னூல். 462) என இத்தகைய போக்கினை வரையறை செய்கிறார். வரலாறு, தொல்லியல், மானிடவியல் என எத்தகைய புலமாயினும் அவற்றை முழுமையாக விளங்கிக் கொள்வதற்கான அடிப்படைத் தரவுகளாக இவை இலங்குகின்றன. பழமை அறிவுடன் கூடிய புதுமைச்செறிவே புதியனவற்றைப் படைத்துப் பயன்கொள்வதற்கான உந்துசக்தியை அளிக்கவல்லன ஆதலால் மரபிலிருந்து புதுமை நோக்கிய இத்தகைய வளர்நிலைப் பயணமே சமுதாயம் மேம்படுவதற்கான ஆக்கங்களை முன்னெடுக்கத் துணைபுரிகின்றன. அவ்வகையில் தொன்மையும் தொடர்ச்சியும் இடியீடுபடாத இழைமரபினையும் கொண்டு உலகின் மூத்தமொழிகளுள் ஒன்றாக விளங்கும் தமிழ்மொழியின் பண்பாட்டு மூலங்கள் வேறு எம்மொழிக்கும் கிடைத்தியலா வரம் எனவே கொள்ள வேண்டியுள்ளது. இலக்கிய இலக்கணச் செழுமையும் கலைப் பண்பாட்டுப் பயில்வும் ஒருங்கே பெற்று உலக அரங்கில் தனித்துவமான செம்மொழியாக விளங்கும் தமிழ்மொழியின் பல்வேறு பக்கங்கள் இத்தகைய தரவுகளின் வழி முறையாகத் தொகுத்து ஆராயப்படாமலும் நீண்ட நெடிய வரலாறு முழுமையாகக் கட்டமைக்கப்படாமலும் இருப்பது வேதனைக்குரியது.

### தமிழியல் ஆய்வுப் புள்ளிகள்

தொல்காப்பியர் கண்ணினும் செவியினும் நுண்ணிதின் உணரும் உணர்வுடை மாந்தர் எனக்குறிப்பிடுவது இயற்கைச் சார்புப் பின்னணியில் மனிதன் தன் உள்ளத்தால் உணர்ந்தவற்றை உள்ளீடாகக் கொண்டு புதியனவற்றை நுட்பமாகப் படைத்துக் கொள்ளுதல் என்றே உரையாசிரியர்களால் பொருள் கொள்ளப்படுகிறது. ஒலியலைகளை உயத்துணர்ந்து அவற்றை எழுத்தொலிகளாகவும் இசையொலிகளாகவும் வரித்துக் கொண்ட பாங்கு தமிழர் வாழ்வியலில் மிகு முக்கியத்துவம் பெறுவதெனலாம். ஐரோப்பியர் வருகையினால் இந்தியாவில் நிகழ்ந்த அரசியல் பொருளாதார ஊடாட்டங்கள் தேசமெங்கும் மொழி, இனம், கலைப் பண்பாட்டுத் தரவுகளை வகைதொகை செய்து ஆய்வுக்குட்படுத்தும் வளமான புத்தொளிமரபிற்கு வித்திட்டது. கீழைத் தேயவியல்-திராவிடவியல் - தமிழியல் என்னும் சொல்லாக்கங்கள் உருவாக்கப்பட்டு இத்தகைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நிலவியல் நிலையில் ஆரிய திராவிட மொழிகள் என்னும் பகுப்பு முறையைக் கையாண்டு வடஇந்திய மொழியாகச் சமஸ்கிருதமும் தென்னிந்திய மொழியாகத் தமிழும் மற்ற மொழிகளுக்கு மூலமாக விளங்கும் கருத்தியலை முன்வைத்துள்ளனர். சற்றேறக் குறைய 1950 வரை திராவிடவியல் என்னும் சொல்லும் தமிழியல் என்னும் சொல்லும் ஒரே பொருண்மை நோக்கிப் பயன்கொள்ளப்பட்டு வந்ததையும் 1950களுக்குப்

பிறகு தமிழியல் என்னும் சொல் அறிஞர்களால் முன்னெடுக்கப்படுவதையும் காண்கிறோம்.

சீகன்பால்கு, எல்லீஸ், கால்டுவெல், எமனோ-பர்ரோ, மெக்கன்சி, இராபர்ட்புரூஸ், ஜான்முர்டாக், ஜேம்ஸ்பிரின்ஸ், சி,வை,தா, உ.வேசா, ச.வையாபுரிப்பிள்ளை, மு.இராகவய்யங்கார், இரா.இராகவய்யங்கார், சேவியர் தனிநாயகம் அடிகள், தெ.பொ.மீ, ஐராவதம் மகாதேவன், முத்துசண்முகம், வ,ஐ.சுப்பிரமணியம், கமில் சுவைலபில், சு.வித்யானந்தன், க.கைலாசபதி, கா.சிவத்தம்பி போன்ற அறிஞர்கள் தமிழியல் ஆய்வின் முன்னோடிகளாகக் காத்திரமான பங்களிப்பை அளித்துள்ளனர். தமிழியல் என்னும் சொல்லை முன்மொழிந்த முன்னோடிகளில் ஒருவரான பேராசிரியர் தனிநாயகம் அடிகள், மொழி, இனம், பண்பாடு ஆகிய தளங்களில் தமிழ்மொழியின் வரலாற்றுத் தொன்மையையும் வளர்நிலையிலான பல்பரிமாணங்கள் மற்றும் படிநிலையாக்கச் செயல்பாடு களையும் இனம்காணும் சொல்லாகவே அதனைப் பயன்கொள்கிறார். மொழியியல், இனவரைவியல், மானுடவியல், மரபியல், தொல்லியல் , சமூக இயங்கியல் சார்ந்த தரவுகளை அறிவியல் கோட்பாடுகளை உள்ளிறுத்தி ஆய்வுசெய்து ஆவணப்படுத்து வதையே இவ்வறிஞர்கள் தமிழியல் ஆய்வு என்னும் பெயரில் முன்னெடுத்துள்ளனர். பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற கள ஆய்வுகள் அகழாய்வுகள் வழியும் பெற்ற மண், கல் மற்றும் இரும்பு போன்ற உலோகங்களால் உருவாக்கப்பட்ட கருவிகள், புழங்கு பொருட்கள் கண்டெடுக்கப்பட்டதன் மூலம், திராவிட மொழி பேசிய மக்களின் வாழிடம் மற்றும் வாழ்வியல் சூழல் சார் தொன்மைக் கருத்தியலைக் கட்டமைக்க முடிந்தது. காசுகள், மண் ஓடுகள் ஆகியவற்றில் பொறிக்கப்பட்டிருந்த குறியீடுகள் எழுத்து வடிவங்கள் அவற்றை ஆய்வுக்குட்படுத்தி பெறப்பட்ட தகவல்கள் தமிழியலின் தனித்தன்மையை உலகிற்கு எடுத்துக்காட்டின.

கடந்த காலத்தில் நிகழ்ந்துள்ள இத்தகைய தமிழியல் ஆய்வுகளைத் தொகுத்துப் பார்க்கும் பொழுது தமிழ்மொழியின் / இனத்தின் பல்வேறு பல்வேறு பக்கங்கள் ஆழ்நிலையில் வாசிப்புக்குட்பட்டிருப்பதையும் சில கண்டுகொள்ளப்படாமல் தவிர்க்கப் பட்டிருப்பதையும் அறியவியலும். அரசியல் பொருளாதார ஊடாட்டங்களால் மாற்றுப் புரிதலில் சில தரவுகள் இனம் காணப்பட்டிருப்பதையும் முறையான வாசிப்புப் பின்புலத்தால் வரலாற்றுத் திரிபுகள் அடையாளங் காணப்பட்டிருப்பதையும் காணமுடிகிறது

ஐராவதம் மகாதேவனின் முந்து தமிழ்க் கல்வெட்டுகள் நூலை ஆய்ந்த கா. சிவத்தம்பி, சமணர்களால் தமிழுக்கான எழுத்து வழக்கு கி.மு. 200 க்குச் சற்று முன்னர் இருந்தே பெருவழக்காகி விட்டது என்கிறார், அந்த எழுத்து வழக்கு படிப்படியாக வளரத் தொடங்கித் தமிழகம் முழுவதும் பரவியது. இந்த எழுத்து முறையைப் பின்பற்றியே தமிழ்நாட்டில் நூல்கள் எழுதத் தொடங்கின. சங்க இலக்கியங்கள் எனக் கொள்ளப்படுபவை இக்காலத்தில் ஒருபுறத்தில் சமகாலப் படைப்புகளாக எழுதப்பட்டும் இன்னொரு புறத்தில் ஏற்கனவே வாய்மொழி மரபில் நிலவிய பாடல்மரபைத் தொகுக்கும் முயற்சியுமாக மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் (தமிழில் இலக்கிய வரலாறு : 2008 பக் : 57) எனக் கருதுவதை நோக்கினால் தமிழ் எழுத்தியல், படைப்பியல், தொகுப்பியல் மரபில் சமணர்களின் பங்களிப்பு அளப்பரியது எனக்கருத இடம் கிடைக்கும். தமிழுக்குச் சமணர்கள் வழங்கிய கொடை குறித்து ஆழ்நிலை ஆய்வுகள் இன்றளவும் வேண்டப்படுகின்றன.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தையும் பாட்டும் தொகையுமாகத் தொகுத்தளிக்கப்பட்டுள்ள

சங்க இலக்கியத்தையும் உரையாசிரியர் இளம்பூரணர் என்னும் சமணர் அணுகிய பார்வையும் சைவசமயப் பின்புலத்துடன் பேராசிரியர் மற்றும் நச்சினார்க்கினியர் அணுகிய பார்வையும் வெவ்வேறானவை. ஏனெனில் இளம்பூரணர் இறையனார் களவியல் உரையில் இடம்பெறும் முச்சங்கங்கள் குறித்து தம் உரையில் எங்குமே காட்டவில்லை. ஆனால் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் இறையனார் களவியல் காட்டும் சங்கம் குறித்த கருத்தாக்கங்களை வரலாற்று ஆதாரங்களாகவே வழிமொழிந்து உரை வகுக்கின்றனர். பேராசிரியர் தொடங்கி வைக்கும் சைவ சமய ஐதீகவாக்க மரபை நச்சினார்க்கினியர் பின்தொடர்ந்து செல்கிறார் எனக் கொள்ளலாம். மேலும் இவ்விருவருமே தொகை நூல்களுக்கான இலக்கணநூலாகத் தொல்காப்பியத்தை இனம்காட்டுவது தொல்காப்பியம் - சங்க இலக்கியம் ஆகிய இரண்டுக்குமான இணைவுப் புள்ளியைச் சமயநோக்குடன் கட்டமைக்க முயல்வதெனக் கொள்ளலாம். ஹரப்பா, மொகஞ்சதாரோ, சிந்து சமவெளி ஆய்வுகள் ஆகியவற்றை முன்வைத்து சைவத்தின் தொன்மையை நிலைநிறுத்தவதோடு தமிழின் தொன்மையையும் சைவத்தின் தொன்மையையும் இணைத்துப் பேசும் வாய்ப்புகளை உருவாக்கியுள்ளனர். குறிப்பாக சங்க இலக்கியத்தில் எங்குமே சிவன் என்னும் சொல் எடுத்தாளப்படவில்லை. மாற்றாக முக்கட் செல்வன், மூவெயில் எரித்தோன், சடையன், நீலமணிமிடற்றன் முதலான பெயர்களே இடம் பெறுகின்றன. இவற்றில் சில பெயர்கள் சமணத்துடனும் பொருந்திப்போகின்றன.

சங்கப் பாடல்களில் வாய்மொழி மரபு தொழிற்பட்டிருப்பதையும் பாண்மரபு அப்பாடல் பரவலாக்கத்தில் முக்கியப் பங்கு வகிப்பதையும் வகிப்பதையும் அறிகிறோம், புலவர் பாடல் எனச் சொல்வதைக் காட்டிலும் சான்றோர் செய்யுள் என வரையறுப்பது அப்பிரதியை வேறுநோக்கில் அணுகுவதற்கான வாய்ப்பினை வழங்குகிறது. ஆங்காங்கே சிதறிக்கிடந்த பாடல்களைத் தொகையாக்கம் செய்வது. அவற்றிலிருந்து இலக்கியக் கொள்கைகளை வரையறை செய்வது, இலக்கணநூல்களை உருவாக்குவது, அதனை அடியொற்றிக் கல்விப் போதனை மரபைக் கட்டமைப்பது என தமிழ்சசமூகததில் சமணம் தொழிற்பட்ட வரலாறு மிகு முக்கியத்துவம் வாய்ந்தது.

சங்கம் குறித்த கருத்தியலில் சைவம் தொழிற்படும் அதேவேளையில் வச்சிர நந்தியின் திராவிட சங்கத்துக்குரிய இடம் குறித்துச் சிந்திப்பதும் அவசியமானது. சமணசமய நிறுவனங்களின் இயங்கியல், அறக்கல்வி போதனை, முந்தைய இலக்கியச் செல்நெறிகளில் இருந்து முற்றிலும் வேறுபட்டுப் பயணித்தபாங்கு ஆகியவை தமிழிலக்கிய வரலாற்றில் தனித்தடம் பதித்தவை என்பதில் மாற்றுக்கருத்தில்லை. சமணத்தைச் சார்ந்தவர்கள் தமிழ்நாட்டில் தம்காலத்தில் நிலவிய சமூகச் செல் நெறியில் காணப்படும் சிக்கல்களைத் தீர்ப்பதற்குப் பண்டைய வாழ்க்கை முறையும் புதிய அறநெறிகளும் இணைந்த முறைமை பற்றி ஆழமாகச் சிந்தித்துத் தம் சமூக இயங்கியலை முன்னெடுத்தனர் எனக் கருதும் கா.சிவத்தம்பியின் கருத் தியலோடு நாம் நீதி இலக்கியங்களையும் காப்பியங்களையும் அணுக வேண்டிய தேவை உண்டு. சமணர் மரபைக் கையளிக்கும் இலக்கியங்களான அற இலக்கியங்கள் அனைத்துமே போரினாலும் புறச்சூழல்களாலும் சிதைந்துகிடந்த தமிழ்ச்சமூகத்தை மீட்டெடுக்கும் வகையில் படைப்பாக்கம் பெற்றவையே. வாழ்வியல் அறங்களைத் தொகுத்து நிரல்படுத்தி நீதி இலக்கியங்களாக மக்களிடம் கொண்டு சேர்ப்பதன் வழி ஒரு தரமான சமூகத்தைக் கட்டுமானம் செய்ய முடியும் என்பதைக் கருதியுள்ளனர். அதனாலேயே தொடர்ந்து

காப்பிய மரபு தொழிற்பட்டபொழுதும் அத்தகைய அறங்களையும் நீதிகளையும் உள்ளீடாகக் கொண்ட கதையாக்க கங்களாக முன்மொழிந்துள்ளனர்

தொல்காப்பிய ஆய்வை முன்னெடுத்தவர்களில் மூன்று விதமான குழுவினர் தொழிற்பட்டிருப்பதை அறிகிறோம். மூலநூலை எளிய நிலையில் உணர்ந்து போற்றும் வகையிலான உரை விளக்கமளித்துள்ள இளம்பூரணர், நச்சி னார்க்கினியர், பேராசிரியர், சேனா வரையர், தெய்வச்சிலையார், கல்லாடர், பழைய உரையாசிரியர் போன்றோர் முதல் அணியில் இடம்பெறுகின்றனர். தொல்காப்பியத்தை மூலநூலாகக் கொண்டு பிற்காலத்தில் இலக்கண ஆக்கங்களை அளித்துள்ள பவணந்தியார், நாற்கவிராச நம்பி, சுவாமிநாத தேசிகர் முதலானோர் இரண்டாம் அணியில் இடம்பெறுகின்றனர். அச்சுருவாக்கப் பின்புலத்தில் தொல்காப்பிய மூலநூலையும் உரைவிளக்கங்களையும் பதிப்பித்ததுடன் தக்கசான்றுகளுடன் குறிப்புரை ஆய்வுரைகளை வழங்கியுள்ள அறிஞர்கள் மூன்றாம் அணியிலும் இடம்பெறுகின்றனர். சி.வை.தா., ரா. இராகவய்யங்கார், மு.இராகவய்யங்கார், இளவழகனார், அடிகளாசிரியன், ஆ. பூவராகம் பிள்ளை, புலவர் குழந்தை, கு.சுந்தரமூர்த்தி, பவானந்தம் பிள்ளை, அருணை வடிவேல் முதலியார், ச. வே. சுப்பிரமணியம், சிவ லிங்கனார், வெள்ளைவாரணர், வ.சுப.மாணிக்கம், சோ.ந.கந்தசாமி, தமிழண்ணல் போன்றோர் இம்மூன்றாம் அணியில் நிற்கும் முன்னோடிகளாவர். தொல்காப்பிய இலக்கணப் பிரதி முன்வைக்கும் கருத்தியலை ஆழமான வாசிப்புக்குட்படுத்தி அதன் பல் பரிமாணங்களும் வெளிப்படும் வகையிலான ஆய்வை முன்னெடுத்த பெருமை இவர்களுக்குண்டு.

தமிழில் கி.பி 8 ஆம் நூற்றாண்டு முதல் 14 ஆம் நூற்றாண்டு வரையிலான கால கட்டம்படைப்பிலக்கியப்பயில்வுநெறியில் புதிய முயற்சிகளுக்கும் களங்களுக்கும் வித்திட்ட காலம் எனக் கருத முடிகிறது. தனிப்பாடல்கள் புலம் தொகுத்துத் தொகை நூல்களாக வடிவம் பெற்றமை, அவற்றின் உட்கிடக்கையை எல்லோரும் அறியும் வகையில் எளிமையான உரை விளக்கங்கள் உருப் பெற்றமை, சொற் பொருள் விளக்கநிலையில் நிகண்டுகள் உருவாக்கம், யாப்பு அணி உருவாக்கம், சிற்றிலக்கியங்களின் தோற்றம், சித்த தத்துவங்களின் தொகையாக்கம், சமய நிறுவனமயப்பட்ட முறையிலான கோயில் ஒழுங்கு நடைமுறைகள், சிற்பம், ஓவியம், கட்டிடம், மருத்துவம் சார் கருத்தாக்கங்களின் தொகையாக்கம் என பல்நிலைத் தரவுகள் பயில்வு பெற்று மேலோங்கிய தன்மையினைக் காண்கிறோம். பல்லவ பாண்டிய அரசுருவாக்கம்அதன்ஊடேசமணபௌத்த சமயவாதிகள் ஒருபுறம் சைவ வைணவ சமயவாதிகள் மறுபுறம் நின்று அரசியல் செல்வாக்கு பெறுவதில் நிகழ்த்திய வாதங்கள் பக்தி இலக்கியங்களில் மையப்பொருளாய் அமைந்திருப்பதைக் காண்கிறோம்

தமிழிலக்கிய மரபில் பக்தி இலக்கிய ஆய்வு என்பது முந்தைய இலக்கிய ஆக்கச் செல்நெறியில் இருந்து மாறுபட்ட தன்மையுடையது. உற்றுநோக்கினால் சங்ககால அகம் புறம்சார் கொள்கைகள் வேறு பொருண்மையில் கையாளப்பட்டிருத்தலை அறிகிறோம். தலைவன் தலைவியரின் மானுட அகக்காதல் மரபிற்கு மாற்றாக மனிதன் - தெய்வநிலைக் காதல்மரபு தோற்றம் கொள்வதையும், போரில் புறப்பகைவரை வெல்வதைக் காட்டிலும் மனம்சார் அகப்பகையை வெல்வதே வீரநிலையாகக் கருதப்படுவதையும் காணமுடிகிறது. உலகியல் அனுபவத்தைக் காட்டிலும் இறைஅனுபவமே முதன்மை எனும்போக்கு மேலோங்கி இருப்பதையும் மானுட மேம்பாட்டிற்கு அதுவேவழி என்னும் கருத்தியல் முன் வைக்கப்பட்டிருத்தலையும் காண்கிறோம்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்து உரையில் நச்சினார்க்கினியர், பதிகப்பாட்டிற்கு ஈண்டுக் கூறிய வேறுபாடுகள் திருவாய்மொழி, திருப்பாட்டு, திருவாசகம் என்கிற கொச்சக ஒருபோகுகளில் காண்க, அவை உலக வழக்கன்மையின் காட்டாமாயினம் (தொல்.செய்.149) என எடுத்துக் காட்டுவது ஏழாம் நூற்றாண்டின் இறுதியில் எழுச்சி பெற்ற பக்தி இலக்கியப் பாடல்களை உரையாசிரியரகள் மேற்கோள்களாகக் கையளிக்கும் மரபில்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது. அகத்தியம், இறையனார் களவியல், தொல்காப்பியம், திருமுருகாற்றுப்படை ஆகியவற்றைக் காலவரிசை மேலிட்ட இணைவை உருவாக்கிச் சங்க காலத்தைச் சைவ சமய நிறுவனமயமாக்கும் முயற்சிகள் இவ்விருவரது உரைகளிலும் இருக்கின்றன. இளம்பூரணர் உரையை அடியொற்றிச் சங்கத்தை சைவசமயத் தொன்மையில் இருந்து விடுவித்து சமயம் சாராப் பொதுப்பிரதிகளாக அவ்விலக்கியங்களை அணுக வேண்டிய கட்டாயம் உண்டு

ஏழாம் நூற்றாண்டில் பல்லவர் ஆட்சி தொடங்கிச் சோழர்களால் நிலைநிறுத்தப்பட்ட பக்தி இலக்கியம் சைவத்தில் நம்பியாண்டார் நம்பி திருமுறை என்னும் தொகைநூலின் ஆக்கத்திற்குக் கால்கோளிட்டிருப்பதையும் வைணவத்தில் நாதமுனி என்பவரால் நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் தொகையாக்கம் பெற்றிருப்பதையும் அறிய முடிகிறது. தனிப்பாடல்களாய்ப் பல்வேறு இடங்களில் இருந்து தொகுத்து முறை செய்யப்பட்டவை என்னும் பொருளிலேயே திருமுறை என்னும் சொல் பயன்பட்டுள்ளதையும் ஆளும் அரச வர்க்கம் அத்தகைய தொகுப்பாக்கத்தில் துணையிருந்ததையும் காணமுடிகிறது. பல்லவர்களாலும் சோழர்களாலும் கலைநயத்துடன் கட்டி முடிக்கப்பட்ட கோவில்களுக்கு வரலாற்றில் இடம் அளித்து ஐதீகவாக்கம் செய்யும் முயற்சியாகவே ஆழ்வார் நாயன்மார் பாடல்கள் அமைகின்றன. பாடல் பெற்ற தலம், மங்களாசாசனம் செய்யப்பட்ட தலம் எனப் புனித நிலை நோக்கிய செயல்பாடாகவே இப்பாடல் முயற்சிகளைக் கருதவியலும்.

உரை எழுதுதல் புலமைசார் பணியாகவும் உரையாசிரியருக்குப் பல்துறை அறிவு அவசியமானது என்னும் கட்டாயத்தையும் தமிழ் உரைமரபு எடுத்துக்காட்டுகிறது. ஏனெனில் தமிழ் உரையாசிரியர்கள் தமிழ், சமஸ்கிருதம் என்னும் இருமொழி வல்லவர்களாக இருந்து உரையாக்கம் செய்துள்ள வரலாறு புலனாகிறது. நூலை இயற்றிய புலவரே தம் நூலுக்கு உரை வகுத்தல், நூலாசிரியரின் மாணாக்கர் தாம் நேரடியாகப் பாடம் கேட்ட மரபை அடியொற்றி உரைவகுத்தல், காலத்தின் தேவை கருதி குறிப்பிட்ட ஒருநூலுக்கு புலமைச் சிறப்புடன் உரைவகுத்தல் எனப் பல்வேறு உரை மரபுகளைக் கட்டமைக்க முடிகிறது. இலக்கிய இலக்கணக் கல்விப்பயில்வு இத்தகைய உரைமரபில் தொழிற்பட்டதெனினும் சமகாலத்தவரால் விளங்கிக் கொள்ளமுடியாத முற்காலப் பிரதியின் பல்வேறு பரிமாணங்களை விளக்குவதுடன் சமகால இயங்கியலோடு பொருத்திப் பார்த்து வளர்ச்சி வீழ்ச்சிப் படிநிலைகளை எடுத்தியம்பும் போக்கும் மேலோங்குவதைக் காணமுடியும்.

தொல்காப்பியச் செய்யுளியல் தொடங்கி இருபதாம் நூற்றாண்டின் யாப்பிலக்கண நூல்கள் ஈறாக வளமான இலக்கணநூல் வளத்தை தமிழ் யாப்பியல் கொண்டிருப்பதை அறிகிறோம். உள்ளே செய்யப்பட்டது என்னும் பொருளில் புலமைச் செயல்பாடாக இனம் காட்டப்படும் செய்யுள் வடிவங்கள் / யாப்பு வரையறைகள் ஈராயிரம் ஆண்டுத் தமிழியலின் இயங்குதளங்கள் என்பதைக் கருதவேண்டும். வெண்பா, அகவற்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா, பரிபா என்னும் பாவடிவங்களும் துறை, தாழிசை, வண்ணம், விருத்தம் ஆகியன உறழ்வதால்

வெளிப்படும் பாவினங்களும் பிறமொழித் தாக்கமற்றுத் தமிழுக்கே தனியுரிமை பெற்ற யாப்பு வடிவங்களாக விளங்குவதோடு நுண்மையும் தொன்மையும் தொடர் வளர்ச்சியும் அடிப்படை மரபு பிறழாத மாற்றங்களும் பெற்றிலங்குவதை அறிகிறோம். மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் விரியும் அகவற்கு இளங்கோ, கலியே பெருங்கடுங்கோ, வஞ்சி உருத்திரங்கண்ணன், குறள்வெண்பாவில் திருவள்ளுவன், பஃறொடை உமாபதி சிவம், கலிவெண்பா கூத்தன், கொச்சகத்தர அருள்மொழித் தேவன், கோவைத்துறை மணிவாசகனார், கலித்து றைத் திருத்தக்கார், தாழிசைத் தலைவன் செயங்கொண்டான், தகும்பல் மண்டிலம் பெருங்கம்பன், மருட்பா ஆரிதனார், பரிபாடல் நல்லந்துவனார், வண்ணத்திற்கே அருணகிரி என தமிழ் யாப்பு வடிவங்களையும் அதில் தனித்துவம் பெற்ற புலமையாளரையும் இணைத்துக் காட்டிப் போற்றுவார்.

சுவாமிக்கண்ணுப் பிள்ளை, ஈ.என் தணிகாசல முதலியார், தி.வீரபத்ர முதலியார், அ.சிதம்பரநாதன், சோ.ந.கந்தசாமி, நா.சுப்பிரமணியன், அன்னிதாமஸ், எஸ்.சுப்பிரமணியன், அ.பிச்சை, தமிழண்ணல், ந.வீ.ஜெயராமன், கைலாசபதி, கா.சிவத் தம்பி, செ.வை.சண்முகம், ச.அகத்தியலிங்கம், கா.கோ.வேங்கடராமன், இரா.திருமுருகன், வ.அய் சுப்பிரமணியம், தி.வே.கோபாலய்யர், அ.சண்முகதாஸ் போன்ற அறிஞர்கள் வடமொழிச் சார்பற்ற தமிழ் யாப்பியலின் தகைமை தனித்தன்மை ஆகியவற்றை எடுத்துக்காட்டி விளக்கியுள்ளனர்.

ஜான் முர்டாக் தமிழ்நூல் பட்டியலுக்கு அரிய தகவல்களுடன் எழுதிய முன்னுரை (1865). வி.எஸ் செங்கல்வராய பிள்ளையின் தமிழ் உரைநடையின் வரலாறு (1904), ஆறுமுக நாவலர், சபாபதி நாவலர், பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, சூரிய நாராயண சாஸ்திரிகள் போன்றோரது எழுத்துகள் உரைநடை வளர்ச்சிக்கான உந்து சக்தியாக அமைந்தன. எஸ் பூர்ணலிங்கம் பிள்ளையின் தமிழ் இலக்கிய அரிச்சுவடி (1904), தமிழ் இலக்கியம் (1929), கே.எஸ். சீனிவாசப் பிள்ளையின்தமிழ் வரலாறு (1922), இலக்கிய இலக்கணத் தேடலில் ஈடுபட்டு அவற்றுக்குக் காலநிர்ணயம் செய்வதில் கவனம் செலுத்திய இரா.இராகவய்யங்கார், மு.இராகவய்யங்கார் போன்றோர் பாண்டித்துரை தேவரின் தமிழ்ச்சங்கத்துடன் (1901) இணைந்து செந்தமிழ் இதழ் வழி நிகழ்த்திய நூல் பதிப்பு மற்றும் காலநிர்ணய முயற்சிகள் தமிழியல் ஆய்வில் தனித்தடம் பதித்தவை எனலாம்.

சங்க இலக்கியங்களின் அச்சும் பதிப்பும் தமிழர் வாழ்வியல் மற்றும் வரலாறு எழுதியலில் ஏற்படுத்திய மாற்றங்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. சுவடிகளில் பதிவாகியிருந்த தமிழ் இலக்கண இலக்கியப் பிரதிகளை அச்சாக்கம் செய்யும் முயற்சிகளில் ஈடுபட்ட பதிப்பாசிரியர்கள் அந்நூல்களைப் பிழையில்லாமல் வழுக்களைந்து சுத்த பாடமாக உருவாக்க முயன்றுள்ளதை அறிகிறோம். ஒருநூலின் பல பிரதிகளை / சுவடிகளைத் தொகுத்துப் பாடபேதங்களை அறிந்து ஆய்வுக்குட்படுத்தும் போக்கு இவர்களிடம் இருந்ததை அறியமுடிகிறது. நூல்குறித்த ஆய்வு வரலாற்றுச் செய்திகள், நூல் அச்சாக்கம் தொடர்பாக எதிர்கொண்ட சிக்கல்கள், செய்த மாற்றங்கள் அதற்கு உதவியோர் ஆகிய தரவுகளை உள்ளடக்கிய முகவுரை எழுதுதல், பாடல் மற்றும் உரைகளை எழுத்து நோக்கில் வேறுபடுத்தி அடையாளப்படுத்துதல், உரை மேற்கோள்களை தனியே இனம் காட்டுதல், பாடவேறுபாடுகளை ஆராய்தல், உரைகளில் கருத்து முடிவுள்ள பகுதிகளை தனித்து எடுத்துக்காட்டல் போன்ற மேம்பட்ட ஆய்வுமுறைகளைக் கையாண்டுள்ளனர்.

சி.வை.தாவின் தொல்காப்பியம் (1885), கலித்தொகை (1887) பதிப்பு முயற்சிகள் தமிழ்ப் படைப்பாக்கங்களை ஒன்றன் பின் ஒன்றாக பதிப்பிக்க வழிகோலின. டாக்டர்.

உ.வே. சாமிநாதையரவர்களுடைய முதற்பதிப்பாகிய பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும் 1889-இல் வெளிவந்தது. இப்பதிப்பிற்குப்பின் உ.வே.சா அவர்களால் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான புறநானூறு (1894) ஐங்குறுநூறு (1903) பதிறுப்பத்து (1904) என ஒன்றன் பின் ஒன்றாக வெளியிடப்பட்டன, நற்றிணை பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் எழுதிய உரையுடன் சென்னை சைவ வித்தியாநுபாலன யந்திரசாலையில் 1915இல் வெளியிடப்பெற்றது. சங்க இலக்கியங்களைப் பதிப்பித்த உ.வே.சாவின் வருகை தமிழ்ப் பதிப்பியலில் புதிய முயற்சிகள் மேற்கொள்வதற்கான வாசலைத் திறந்து விட்டது எனலாம். சமயம் பரப்பலும் கல்விப்போதனை மரபும் புதிய நூல்களை அச்சாக்கம் செய்ய அடிப்படை காரணிகளாய் அமைந்தன. சென்னைக் கல்விச்சங்கம், கிறித்துவ அறிவு வளர்ச்சிச் சமூகம், சைவத் திருமடங்கள் இத்தகைய பதிப்புப் பணியில் பெரும் பங்கு வகித்ததை மறுப்பதற்கில்லை.

மழவை மகாலிங்க அய்யர், எஸ். சாமுவேல் பிள்ளை, ச.வையாபுரிப்பிள்ளை, கோமளபுரம் இராசகோபாலப் பிள்ளை, சுப்புராயச் செட்டியார், ஆறுமுக நாவலர், சவுரிப் பெருமாள் அரங்கன், பின்னத்தூர் நாராயணசாமி அய்யர், எல்லீஸ், மெக்கன்சி, ஜி.யு.போப். பெஸ்கி, ஹென்றிக் பாதிரியார், போன்ற அறிஞர்கள் பதிப்பாக்க / அச்சுருவாக்க முன்னோடிகளாக அறியப்படுகின்றனர். குறிப்பாகப் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை இலக்கியவியல், மொழியியல், சுவடியியல், அகராதியியல் எனப் பல்பரிமாணங்களில் பங்களிப்பைச் செய்திருப்பதோடு வரலாற்று அணுகுமுறை மற்றும் ஒப்பியல் அணுகுமுறையை இயைந்தவாறு வளர்த்தெடுத்தவராக அறியப்படுகிறார். தமிழியல் ஆய்வுக்குரிய அனைத்துச் சாத்தியப்பாடுகளையும் தன்னகத்தே கொண்டவை. அதேபோல மார்க்சியப் பார்வையோடு தமிழியலை அணுகிய தொ.மு.சி. ரகுநாதன், நா.வானமாமலை, க.கைலாசபதி, ஆகியோர் வகுத்தளித்த பாதையில் கா.சிவத்தம்பி பெரும் பாய்ச்சலை நிகழ்த்தியதைக் காணவியலும். ஊடகம், கலை, இலக்கணம், பண்பாடு சார்ந்து அவர் வெளிப்படுத்திய பார்வைகள் புதிய வளங்கள் கொண்டவை எனலாம். பண்டைய இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான அனைத்தையும் இணைத்துப் பார்க்கும் புலமை மரபு கொண்டவராகச் சமூகம், பண்பாடு, கருத்துநிலை, அரசியல் போன்ற களங்களின் உள்ளீடு ஊடாட்டம் சார்ந்து ஆய்வு செய்யும் ஒரு புதிய மரபை தமிழுக்கு வழங்கியவராக அவரைக் கருதவியலும்.

## முடிவுரை

தமிழர் வாழ்வியலின் நிலைக்களன்களை உள்ளிறுத்திச் செய்யப்படும் ஆய்வுகளுக்கான பொதுப்பெயராகத் தமிழியல் என்பதனைக் கொண்டோமெனில் இனவரைவியல், இலக்கியவியல், அரசியல், தொல்லியல், மானுடவியல் மற்றும் சமூகவியல் களங்களில் தமிழினம் தொழிற்பட்ட பாங்கினையும் பண்டுதொட்டுப் பயன்கொண்ட பயில்வுநிலைத் தரவுகளையும் அடையாளம் காணவியலும். தொன்றுதொட்டு தற்காலம் வரையிலான இடையீடுபடா இழைமரபுத் தொடர்பியலில் தமிழின் இத்தகைய தடங்களைத் தொகுத்துப் பார்க்கும் பொழுது ஒரு மூத்த மொழியின் பண்பாட்டு விழுமியங்கள் சமகாலத்தவரால் மறுவாசிப்புக்குட்படுத்த வேண்டிய கட்டாயத்தையும் அறியப்படாத பல பக்கங்களை ஆழமாக ஆய்வுக்குட்படுத்த வேண்டிய தேவையையும் அவை முன்மொழிகின்றன.

**பயன்பயந்த நூல்கள்**

1. தனிநாயகம் சேவியர் அடிகள், ந.மனோகரன் (மொழியாக்கம்), பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் கல்வி, பரிசல் வெளியீடு, 2009,
2. சிவத்தம்பி. கா, தொல்காப்பியமும் கவிதையும், குமரன் புத்தக நிலையம், கொழும்பு - சென்னை,2007.
3. சிவத்தம்பி. கா, சங்க இலக்கியம்: கவிதையும் கருத்தும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. 2009
4. காமராசு, இரா, தனிநாயக அடிகளாரின் தமிழியல் பங்களிப்பு, சாகித்ய அகாதெமி வெளியீடு, 2017